<u>பொது சேவைகள் ஆணைக்குழு</u>

## <u>இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் முகாமைத்துவ உதவி விசேட தர சேவை பிரிவில் மாவட்ட பரிசோதகர் (போக்குவரத்து மற்றும் வர்த்தகம்) பதவிக்கான , பதவி உயர்வுதொடர்பிலான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்ப கோரல் 2020(2023)</u>

2023.06.27 ஆம் திகதியுடைய இலங்கை புகையிரத சேவையின் இல 14 உடைய இருவாரகால அறிக்கையில் 14/20 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட பரீட்சை தொடர்பான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் முகாமைத்துவ உதவி விசேட தர சேவை பிரிவில் மாவட்ட பரிசோதகர் (போக்குவரத்து மற்றும் வர்த்தகம்) பதவிக்கான , பதவி உயர்வு தொடர்பிலான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பக் கோரலின் இறுதி திகதியினை 2023.08.31 என இத்தால் திருத்தியமைக்கின்றேன். அதைப் போன்றே தொடரிலக்கம் 06 மற்றும் 07(இ)யையும் பின்வருமாறு திருத்தியமைக்கின்றேன்.

06). பரீட்சை கட்டணம்

இப் பரீட்சையானது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் மூலம் நடாத்தப்படுகின்றது. பரீட்சை கட்டணம் ரூபா.1,500/- ஆகும். பரீட்சை கட்டணத்தினை மக்கள் வங்கியின் நகர மத்திய கிளையின் கணக்கிலக்கம் 176100129027313 இற்கு விண்ணப்பங்ளையேற்கும் இறுதி திகதிக்கு முன்னர் செலுத்தி, பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்ப பத்திரத்தில் உரிய இடத்தில் கழராத வண்ணம் ஒட்டவும். அப் பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றினை தன்வசம் வைத்திருப்பது பயனளிக்கும்.

1. பரீட்சை தொடர்பில் செலுத்தப்பட்ட பணம் எக் காரணத்தினை முன்னிட்டும் திருப்பி செலுத்தப்பட மாட்டாது.
2. பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

07. விண்ணப்பிக்கும் முறை

(இ) விண்ணப்பதாரி தம்மால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றுடன் தமது விண்ணப்பத்தினை தமது உப திணைக்கள தலைவருக்கு முன்வைக்கவேண்டும். முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை உப திணைக்கள தலைவரின் சான்றுரையினை பெற்றுக் கொண்டதன் பின்னர் நிழற் பிரதியினை தனது தனிநபர்கோவையில் உள்ளடக்கி அதன் மூல பிரதியை புகையிரத பொதுமுகாமையாளர் அலுலவகத்தின் நியமன கிளைக்கு 2023.08.31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

டபிள்யூ.ஏ.டீ.எஸ்.குணசிங்க
புகையிரத பொதுமுகாமையாளர்

W.A.D.S. Gunasinghe
General Manager Railways
Sri Lanka Railways
Colombo 10.